மன்றப்பொருள்

2020 ம் ஆண்டு ஜனவரி 31/01/2020 ம் தேதி வெள்ளிக் கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெற்ற சாதாரணக் கூட்டம் பண்ணுருட்டி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கை.

திரு.எஸ். மகாராஜன்,
தனி அலுலவர்.

1. ஆணையர் (பொ) அவர்களின் டிசம்பர் 2019ம் மாத நாட்குறிப்பேடு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு – மன்றம் பதிவு செய்யலாம்

2. பண்ணுருட்டி நகராட்சி எல்லைக்கு உட்பட்ட கெடிலம் ஆற்றில் திருவிழா (2019 – 2020) ஆண்டு வரும் 19.01.2020 ல் நடைபெற உள்ளதால்அவ்விழாவிற்கு ஏற்படும் தற்காலிக கடைகள் மற்றும் மேற்படி திருவிழாவிற்கு வரும் வாகனங்கள் நிறுத்தும் இடத்திற்கு கட்டணங்கள் வசூல் செய்யும் உரிமம் வழங்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி /பொது ஏலம் கடந்த ஆண்டு கட்டண விபரத்துடன் கோரிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு: 1.** மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நிர்வாக நலன் கருதியும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கிகரிக்கலாம்.

**ந.க.எண்: 03/2018/அ1**

**கட்டணவிபரம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | சைக்கில் ஒன்றுக்கு | ..... | ரூ. 2.00 |
| 2. | மொபட் ஒன்றுக்கு | ..... | ரூ. 3.00 |
| 3. | கட்டை வண்டி மற்றும் டயர் வண்டி ஒன்றுக்கு | ..... | ரூ. 5.00 |
| 4. | கார் மற்றும் இதர வாகனங்கள் ஒன்றுக்கு | ..... | ரூ. 5.00 |
| 5. | 5x2= 10 சதுர அடியில் அமைந்துள்ள கடை ஒன்றுக்கு (10 சதுரடிக்கு மேல் கடை ஒன்றுக்கு – ரூ. 50.00) | ..... | ரூ. 25.00 |
| 6. | சாப்பாடு வைத்து விற்கும் கூடை ஒன்றுக்கு | ..... | ரூ. 10.00 |
| 7. | பிளாஸ்டிக் பொருட்கள் விற்பனை ஒன்றுக்கு | ..... | ரூ. 5.00 |
| 8. | வளையல் கடை ஒன்றுக்கு | ..... | ரூ. 5.00 |
| 9. | இனிப்பு பலகாரக் கடை | ..... | ரூ. 10.00 |
| 10. | டீ கடை ஒன்றுக்கு | ..... | ரூ. 10.00 |
| 11. | பட்டாணி, பேரிச்சை, மொச்சை கடை ஒன்றுக்கு | ..... | ரூ. 5.00 |
| 12. | தேங்காய், பழம், கற்பூரம் விற்பனை ஒன்றுக்கு | ..... | ரூ. 10.00 |
| 13. | புத்தக கடை ஒன்றுக்கு | ..... | ரூ. 5.00 |
| 14. | சோடா கலர் விற்பனை கடை ஒன்றுக்கு | ..... | ரூ. 5.00 |
| 15. | கரும்பு விற்பனை கடை ஒன்றுக்கு | ..... | ரூ. 25.00 |
| 16. | கிழங்குவகை கடை ஒன்றுக்கு | ..... | ரூ. 10.00 |
| 17. | மேற்காணும் கடைகள் தவிர்த்து வரும் இதர கடைகள் ஒன்றுக்கு | ..... | ரூ. 5.00 |
| 18. | வாழைப்பழம் ஏலம் விடுதல் வண்டிக்கு | ..... | ரூ. 10.00 |
| 19. | ஐஸ் வண்டிக்கு | ..... | ரூ. 10.00 |

3. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள கெடிலம் ஆற்றில் பொங்கல் திருநாளை முன்னிட்டு 19.01.2020 அன்று நடைபெறவுள்ளது. ஆற்றுத் திருவிழாவிற்கு ஆற்றங்கரை பகுதியில் குவிந்துள்ள குப்பை மேடுகளை ஒதுக்கி சமன் செய்ய வேளாண்மை துறையின் செயின் டோசர் வாகனம் மூலம் வாடகை அடிப்படையில் பணிமேற்கொள்ளவும் அதற்கான தோராய மதிப்பு ரூ. 70,000– மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மன்றம் ஒப்புதல் வழங்கலாம் .
**ந.க.எண்: 2819/2018/இ1**

**4)** பண்ணுருட்டி நகராட்சியில் இயற்கை இடற்பாடுகள் மற்றும் குடிநீர்திட்டம் மூலம் சேதமடைந்துள்ள கீழ்கண்ட சாலைகளை 2019–2020ம் நிதி ஆண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 14 வது மத்திய நிதிக் குழு நிதின் மூலம் 5 தார்சாலை பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு ரூ. 200.00 இலட்சத்திற்கு தயார் செய்து நகரமன்ற தீர்மான எண் 01 நாள் 06.01.2020ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு அவர்களிடம் ந.க.எண் 003/2020/பி1 நாள் 07.01.2020 தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு , மேற்கண்ட 5 எண்கள் கொண்ட தார் சாலைகள் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோர, ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு தயார் செய்து செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர், செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலகம் கடலூர் முகவரிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாவட்ட அளவில் ஒரு தமிழ் தினசரி நாளிதழில் ஒரு நாள் மட்டும் 50 சதுர சென்டி மீட்டர் பரப்பிற்கு மிகாமல் பிரசுரம் செய்ய கோரப்பட்டது.

அதன் படி நாள் 10.01.2020ல் (Two leaf media) நமது அம்மா தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டு இதற்கான பட்டியல் கேட்டு பட்டியல் வரப்பெற்ற விபரம்.

| வ.எண் | விளம்பரதாரரின் பெயர் | பட்டியல் எண் நாள் | பட்டியல் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | நமது அம்மா Tow leaf mediaa | ADVT – 2111 நாள் 10.01.2020 | ரூ. 25,000/– |

மேற்கண்ட விளம்பரத்திற்காண பட்டியல் தொகையை மேற்கண்ட விளம்பர நாளிதழிக்கு வழங்க நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்: 0004/2020/இ1**

5. இந்நகராட்சியில் நகராட்சி ஆணையாளர் பணியிடம் காலியாக உள்ளது. அப்பணியிடத்தில் திரு. எஸ். மகாராஜன், நகராட்சி பொறியாளர் அவர்கள் 27.11.2019 முதல் தொடர்ந்து கூடுதல் பொறுப்பாக பணிபுரிந்து வருவதால் ஆணையாளர் பணியிடத்தினை கூடுதல் பணியாக கவனிக்கும் காலம் வரை ( அரசு ஆணை எண்(G.O.(Ms) No. 153 Personnel and Administrative reforms (FR.IV) Department நாள் 05.12.2017 ல் தெரிவித்துள்ளபடி) A&B பிரிவு பணியாளர்கள் முழு கூடுதல் பொறுப்பு வகித்தால் கூடுதல் சம்பளம் பெற தகுதி உண்டு என மேற்கண்ட அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்பேரில் திரு.எஸ். மகாராஜன், நகராட்சி பொறியாளர் அவரகள் ஆணையாளராக கூடுதல் பணிபுரியும் காலம் வரை அன்னாரின் நகராட்சி பொறியளார் பணியிடத்தில் வாங்கிய சம்பளத்தில் 1/5 பாகம் கூடுதல் சம்பளம் கணக்கிட்டு ஒவ்வொரு மாதத்திற்கும் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** 1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்: 4910/2017/சி1**

6. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட கீழ்கண்டுள்ள தெருக்களுக்கு குடிநீர் பிரதான குழாய் இல்லாததால் பொது மக்களுக்கு குடிநீர் இணைப்பு வழங்க இயலவில்லை. மேலும், குடிநீர் இணைப்பு வேண்டி பொதுமக்களிடமிருந்து தொடர்ந்து கோரிக்கை வந்த வண்ணம் உள்ளது. எனவே பொதுமக்களின் குடிநீர் அத்தியாவசியம் கருதி கீழ்கண்டுள்ள தெருக்களுக்கு குடிநீர் பகிர்மான குழாய் அமைக்க வேண்டியுள்ளது.

1) வார்டு 28 முத்தைய நகர்
2) வார்டு 18 லிங்க் ரோடு லட்சுமிபதி நகர் மேற்குபுற தெரு
3) வார்டு 01 ராமன் லட்சுமனன் நகர்
4) வார்டு 17 வரதராஜ நகர்
5) வார்டு 10 ஜெயப்பிரியா நகர்
6) வார்டு 19 விஎஸ்.பி நகர் (ஜான்டுயி பள்ளி பின்புறம்)
7) வார்டு 27 சீலக்காரத் தெரு.
8) வார்டு 33 ஐஸ்வர்யா நகர் பகுதிகளில் பிரதான குடிநீர் குழாய் அமைத்தல்.

மேற்கண்ட தெருக்களுக்கு குடிநீர் பிரதான குழாய் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 7,00,000/– (ரூபாய் ஏழு இலட்சம்) மட்டும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** **1.** மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்: 90/2020/இ2**

7. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட கீழ்கண்டுள்ள தெருக்களுக்கு குடிநீர் பகிர்மான குழாய் இல்லாததால் குடிநிர் இணைப்பு வழங்க இயலவில்லை. மேலும் பொது மக்களிடமிருந்து குடிநீர் இணைப்பு வேண்டி தொடர்ந்து மனு வந்தவண்ணம் உள்ளது. எனவே பொதுமக்களின் குடிநீர் அத்தியாவசியம் கருதி கீழ்கண்டுள்ள தெருக்களுக்கு குடிநீர் பகிர்மான குழாய் அமைக்க வேண்டிய விபரம்.

1) வார்டு 28 தனலட்சுமி நகர், மூப்பனார் நகர், வெங்கட்டா நகர்
2) வார்டு 26 ராஜேஸ்வரி நகர், பிருந்நதாவனம் நகர்
3) வார்டு 11 கடலுார் சாலை அம்மா அறக்கட்டளை முதல் அசோக நகர் சந்திப்பு வரை பிரதான குடிநீர் குழாய் அமைத்தல்.

மேற்கண்ட தெருக்களுக்கு குடிநீர் குழாய் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 9,80,00/– க்கு (ரூ பாய் ஒன்பது இலட்சத்து எண்பதாயிரம்) மட்டும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** **1.**மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற் கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்: 90/2020/இ2**

8. பண்ணுருட்டி நகராட்சிக்கு **2020 – 2021** ஆண்டுக்கு தேவையான உபயோகத்திற்கு பதிவேடுகள், படிவங்கள் மற்றும் எழுது பொருட்கள் தேவைக்கேற்ப தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்ட்கோ சர்வ் திருச்சி என்ற நிறுவனத்தில் வாங்கலாம் அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.4.00 (ரூபாய் நான்கு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** **1** மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்: 1257/2017/இ2**

9) பண்ணுருட்டி நகராட்சி எல்லைக்கு உட்பட்ட வார்டு எண் 23ல் க.எண். 30,31 இராஜாஜி சாலையில் உள்ள போர்டிங் மற்றும் லாட்ஜ் வணிக கட்டிடம் பழையவரி குறைவாக உள்ளதனை அதனை மறுநிர்ணயம் செய்து அந்நாருக்கு நோட்டீஸ் வழங்கப்பட்டது அதனை எதிர்த்து ரங்கா போர்டிங் மற்றும் லாட்ஜ் W.P.No. 33884/19 உயர்நீதிமன்றத்தினை வழக்கு தொடர்ந்துள்ளார். எனவே, அன்னாரது கட்டிடத்தினை உரிய ஆவனத்துடன் சம்பந்தப்பட்டவருக்கு தெரியப்படுத்தி மனு அளவீடு செய்து சென்னை உயர்நீதிமன்றத்திற்கு உரிய காலத்தில் தெரிவிக்க அறிவுரை வழங்கப்பட்டது. எனவே, புகைப்படம் மற்றும் வீடியோ எடுக்கும் பணிக்கு அண்ணாமலை ஸ்டியோவை அப்பணிக்கு அமர்த்தியதில் அதற்கான செலவுத் தொகை ரூ. 5000/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** **1.**மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்க முடிவுற்ற பணிக்கு தொகை ரூ. 5000/– பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்கலாம்.

10. பண்ணுருட்டி நகராட்சிக்கு உட்பட்ட 33 வார்டுகளில் சேகரமாகும் குப்பைகளை ஈரத்தன்மையுள்ள கழிவுகளை இயற்கை உரமாக்கும் பணிசெய்யப்பட்டு வருகிறது. மக்காத விலைபோகாத பிளாஸ்டிக் குப்பைகளை சிமெண்ட் ஆலைக்கு அனுப்புவதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. தரம் பிரிகிகப்பட்டு வரப்படும் மக்காத பிளாஸ்டிக்குகளை (பெய்லிங்) பண்டல் செய்து வாகனம் மூலம் அனுப்பிட அவசியம் உள்ளதாலும், இந்நகராட்சியில் ஏற்கனவே பெய்லிங் இயந்திரம் வாங்கப்பட்டுள்ளதால் அதனை பயன்படுத்தி பிளாஸ்டிக்குகளை பண்டல் செய்திட ரோல்டேப், கிளிப் தேவைப்படுவதால், அதனை ரூ. 5000/க்கு செலவினத்தில் அதனை வாங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு 1</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேறக்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்: /2020/எச்1**

11. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு 1 முதல் 33 வரையுள்ள தெருகளில் உள்ள LED விளக்குகள் நகராட்சி மின் பணியாளர்கள் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. தற்போது LED விளக்குகள் பழுதடைந்துள்ளதாலும் நகராட்சியில் LED விளக்குகள் இருப்பு இல்லாததாலும் சரி செய்ய இயலாத நிலையில் உள்ளது. மேலும் நகராட்சிக்கு சொந்தமான “ காந்தி பூங்கா” LED விளக்குகள் நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் பொருத்தப்பட்டது. தற்போது பழுதடைந்துள்ளது. மேற்கண்ட பணிகள் பொதுமக்களின் அத்தியாவசிய பணி என்பதால் அதற்குரிய விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. குறைந்த விலைப்புள்ளி அடிப்படையில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 2.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு: 1.</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேறக்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

12. பண்ணுருட்டி நகராட்சி – தெருவிளக்கு தனியர் மூலம் பராமரிப்பு பண்ணுருட்டி நகராட்சியின் தெருமின் விளக்குகள் 1x40 வாட்ஸ்மொத்தம் 1600 எண்கள் கடந்த 2016-17 ம் ஆண்டு முதல் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடமிருந்து வரப்பெற்ற விலை விகித ஒப்புதல் ந.க.எண். 13899/2016/டிஓ1 நாள் 24.11.2016 ந் தேதியிட்ட நிர்வாக அனுமதியின்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு தனியர் மூலம் பராமரிக்கப்பட்டு 2017-18 ம் ஆண்டுக்கான ஒப்பந்தக்காலம் 31.03.2018ல் வுடன் முடிவடைந்துவிட்டது. ஏற்கெனவே ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ள மேற்கண்ட குழல்விளக்குகள் 1600 எண்களை பராமரிக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 2016-17,2017-18 மற்றும் 2018-19 வரை மூன்று வருடங்களுக்கு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. ஆனால் ஒராண்டிற்கு அனுமதி வழுங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு பராமரிப்பு பணிகள் நடைபெற்று வந்தது. எனவே ஒப்பந்தக் காலம் 31.03.2018 ல் முடிவடைந்து 2018-19 ம் ஆண்டு பராமரிப்பு பணிக்கு ரூ. 15.81 லட்சத்திற்கு மன்றத்திற்கு பொருள் வைத்து மன்ற அனுமதி பெறப்பட்டு தனியார் மூலம் பராமரிக்க நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி ந.க.எண். 13899/2016/டிஓ1 நாள் 24.09..2018 ல் பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணியானை வழங்கப்பட்டு தெருகுழல்மின் விளக்குகள் பராமரிப்பு பணிகள் 05.02.2020 ல் முடிவடையும் நிலையில் உள்ளது.

இந்நிலையில் தெருகுழல் மின்விளக்குகள் 1600 எண்கள் பராமரிப்பு பணிகள் 2020-2021 ம் நிதியாண்டிற்றகு ரூ.13.28 இலட்சத்திற்கு மேற்கொள்ள மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் ஒப்பந்ததாரரின் செயல்திறனின் அடிப்டையில் 2021-2022, 2022-2023 ம் நிதியாண்டுகளுக்கு ஒவ்வொரு ஆண்டிற்கும் மன்ற அனுமதி , மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி பெற்று நீட்டித்துக் கொள்ளவும், மேலும் அடுத்த ஆண்டிற்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள ஏதுவாக நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்த நிறுவனத்தை முடிவு செய்வதற்கு கால அவகாசம் தேவைப்படுவதால் தற்பொழுதுள்ள விலை விகிதத்தில் தற்பொழுது பராமரிப்பு பணி செய்து வரும் நிறுவனத்தின் ஒப்பந்த காலத்தை 31.03.2020 வரை நீட்டித்து கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு –</u> 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

3. 31.03.2020 வரை ஒப்பந்தம் நீட்டிக்கப்பட்ட காலத்திற்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(கோ.எண். /2020/இ2 )

13. பண்ணுருட்டி நகராட்சியில் 2019–20 ஆம் ஆண்டிற்கான 14வது மத்திய நிதிக் குழு மான்ய நிதியில் கீழ்கண்ட பணிகளுக்கு நகர் மன்றத் தீர்மானம் எண் 01 நாள் 06.01.2020 மூலம் நிர்வாக அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து 28.01.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள்கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. (லட்சத்தில்) | ஒப்பந்ததாரர்கள் பெயர் |
|---|---|---|---|
| 1 | வார்டு எண் 11. அசோக் நகர் மற்றும் குட்டை தெரு 1வது 2வது மற்றும் குறுக்கு தெருக்கள் ஆகிய பகுதிகளுக்கு தார் சாலை அமைத்தல் | 40.00 | M/s.NSK Constructions<br>M/s. Bharath & Co., |
| 2 | வார்டு எண் 11. சரநாராயண நகர், லஷ்மி ரங்கா நகர், வார்டு எண்1. பானுப்பிரியா நகர் மற்றும் வார்டு எண் 33. ஐஸ்வர்யா நகர் ஆகிய பகுதிகளுக்கு தார் சாலை அமைத்தல் | 40.00 | M/s.NSK Constructions<br>M/s. Bharath & Co., |
| 3 | வார்டு எண் 32. ஆ.ஆண்டிக்குப்பம் புது நகர் மற்றும் வார்டு எண் 25. பண்ருட்டியார் நகர் ஆகிய பகுதிகளுக்கு தார் சாலை அமைத்தல் | 40.00 | M/s.NSK Constructions<br>M/s. Bharath & Co., |
| 4 | வார்டு எண் 28. AMS நகர், பஞ்சவர்ணம் நகர் மற்றும் வடிவேலன் நகர் ஆகிய பகுதிகளுக்கு தார் சாலை அமைத்தல் | 40.00 | M/s.NSK Constructions<br>M/s. Bharath & Co., |
| 5 | வார்டு எண் 28. முத்தையா நகர், தேவகி நகர், வார்டு எண் 33. திருவதிகை கருமாதி மண்டபம் அணுகு சாலை மற்றும் வார்டு எண் 17. நேதாஜி நகர் ஆகிய பகுதிகளுக்கு தார் சாலை அமைத்தல் | 40.00 | M/s.NSK Constructions<br>M/s. Bharath & Co., |

ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை தொழில் நுட்ப தகுதி (Technical Bid) குறித்த விவரங்கள் அடங்கிய முதல் உறையை பிரித்து தொழில்நுட்ப தகுதியினை, தொழில்நுட்ப தகுதி கணக்கிட்டு கலந்தாய்வு குழுவின் முடிவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு மேற்கண்ட ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்ப தகுதிகள் உள்ளதாக பரிசீலிக்கப்பட்டதின் விவரம் கீழ்கண்டவாறு

| **வ. எண்** | **வேலையின் பெயர்** | **மதிப்பீட்டு தொகை ரூ. (லட்சத்தில்)** | **தொழில்நுட்ப தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களின் விவரம்** |
|---|---|---|---|
| 1 | வார்டு எண் 11. அசோக் நகர் மற்றும் குட்டை தெரு 1வது 2வது மற்றும் குறுக்கு தெருக்கள் ஆகிய பகுதிகளுக்கு தார் சாலை அமைத்தல் | 40.00 | M/s.NSK Constructions<br>M/s. Bharath & Co., |
| 2 | வார்டு எண் 11. சரநாராயண நகர், லஷ்மி ரங்கா நகர், வார்டு எண்1. பானுப்பிரியா நகர் மற்றும் வார்டு எண் 33. ஐஸ்வர்யா நகர் ஆகிய பகுதிகளுக்கு தார் சாலை அமைத்தல் | 40.00 | M/s.NSK Constructions<br>M/s. Bharath & Co., |
| 3 | வார்டு எண் 32. ஆ.ஆண்டிக்குப்பம் புது நகர் மற்றும் வார்டு எண் 25. பண்ருட்டியார் நகர் ஆகிய பகுதிகளுக்கு தார் சாலை அமைத்தல் | 40.00 | M/s.NSK Constructions<br>M/s. Bharath & Co., |
| 4 | வார்டு எண் 28. AMS நகர், பஞ்சவர்ணம் நகர் மற்றும் வடிவேலன் நகர் ஆகிய பகுதிகளுக்கு தார் சாலை அமைத்தல் | 40.00 | M/s.NSK Constructions<br>M/s. Bharath & Co., |
| 5 | வார்டு எண் 28. முத்தையா நகர், தேவகி நகர், வார்டு எண் 33. திருவதிகை கருமாதி மண்டபம் அணுகு சாலை மற்றும் வார்டு எண் 17. நேதாஜி நகர் ஆகிய பகுதிகளுக்கு தார் சாலை அமைத்தல் | 40.00 | M/s.NSK Constructions<br>M/s. Bharath & Co., |

மேற்கண்ட பணிகளுக்கு தொழில்நுட்ப தகுதிகள் உள்ளதாக பரிசீலிக்கப்பட்டவர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் **30.01.2019** அன்று விலை விகித ஒப்பந்தப்புள்ளி (Price Bid) திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதன் விவரம் கீழ்க்கண்டவாறு.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. (லட்சத்தில்) | ஒப்பந்ததாரர்கள் பெயர் | ஒப்பந்த சதவீதம் மதிப்பீட்டிற்கு | |
|---|---|---|---|---|---|
| | | | | கூடுதல் | குறைவு |
| 1 | வார்டு எண் **11.** அசோக் நகர் மற்றும் குட்டை தெரு **1**வது **2**வது மற்றும் குறுக்கு தெருக்கள் ஆகிய பகுதிகளுக்கு தார் சாலை அமைத்தல் | 40.00 | M/s.NSK Constructions | | 0.09 % |
| | | | M/s. Bharath & Co., | 0.46 % | |
| 2 | வார்டு எண் **11.** சரநாராயண நகர், லஷ்மி ரங்கா நகர், வார்டு எண்**1.** பானுப்பிரியா நகர் மற்றும் வார்டு எண் **33.** ஐஸ்வர்யா நகர் ஆகிய பகுதிகளுக்கு தார் சாலை அமைத்தல் | 40.00 | M/s.NSK Constructions | | 0.23 % |
| | | | M/s. Bharath & Co., | 0.39 % | |
| 3 | வார்டு எண் **32.** ஆ.ஆண்டிக்குப்பம் புது நகர் மற்றும் வார்டு எண் **25.** பண்ருட்டியார் நகர் ஆகிய பகுதிகளுக்கு தார் சாலை அமைத்தல் | 40.00 | M/s.NSK Constructions | | 0.21 % |
| | | | M/s. Bharath & Co., | 0.39 % | |
| 4 | வார்டு எண் **28.** AMS நகர், பஞ்சவர்ணம் நகர் மற்றும் வடிவேலன் நகர் ஆகிய பகுதிகளுக்கு தார் சாலை அமைத்தல் | 40.00 | M/s.NSK Constructions | | 0.12 % |
| | | | M/s. Bharath & Co., | 0.45 % | |
| 5 | வார்டு எண் **28.** முத்தையா நகர், தேவகி நகர், வார்டு எண் **33.** திருவதிகை கருமாதி மண்டபம் அணுகு சாலை மற்றும் வார்டு எண் **17.** நேதாஜி நகர் ஆகிய பகுதிகளுக்கு தார் சாலை அமைத்தல் | 40.00 | M/s.NSK Constructions | | 0.15 % |
| | | | M/s. Bharath & Co., | 0.43 % | |

மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின்ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது

அலுவலகக் குறிப்பு – **1.** வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக அளித்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்று ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்.0004 / 2020 / இ1

**14.** பண்ணுருட்டி நகராட்சி தீபாவளி மற்றும் தொழில் மலர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் கடலூர் அவர்களின் ந.க.எண். 144/செமதொ/2019 நாள்.13.10.2019ந் தேதியிட்ட கடிதத்தில் நகராட்சி சார்பில் செயல்படுத்தப்படும் அர சுநலத்திட்டங்கள் வளர்ச்சி பணிகள் உட்பட பல்வேறு திட்டங்கள் மற்றும் பல சிறப்பு அம்சங்களை விளம்பரத்திறகென்று அரசு ஒதுக்கீடு செய்துள்ள நதி இருப்பில் அரசு விளம்பரங்களை நமது முரசு நாளிதழ் தீபாவளி மற்றும் தொழில் மலர் **2019** க்கு வழங்குமாறு தெரிவிக்கப்பட்டு கடிதம் **14.10.2019**ல் இவ்வலுவலகத்திற்கு வரப்பெற்றது அதன்படி இந்நகராட்சியில் கடந்த **2018–2019** ம் ஆண்டில் நடைபெற்ற திட்டப்பணிகள் குறித்த விளம்பரம் மேற்கண்ட நமது முரசு நாளிதழ் தினசரி நாளிதழில் நாள்.**27.10.2019** ல் விளம்பரம் செய்யப்பட்டு இதற்கான பட்டியல் எண்.**0123** நாள் **27.10.2019** ல் தீபாவளி மலரில் விளம்பர கட்டணம் ரூ.**9,975/–** (ரூபாய் ஒன்பதாயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்தைந்து) மட்டும் பட்டியல் கேட்டு நாள்.**23.11.2019**ல் கடிதம் வரப்பெற்றுள்ளது மேற்கண்ட நமது முரசு நாளிதழுக்கு மேற்கண்ட விளம்பர கட்டணத்தை வழங்க நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – **1.** மன்றம் அனுமதிக்கலாம்

**2.**மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்

கோ. எண்.2274/2019/இ1

15. பண்ணுருட்டி நகராட்சி வார்டு எண். 13 அக்காத்தம்மன் கோயில் பாட்டை அருகில் சிமெண்ட் சாலை அமைத்திட மேற்கண்ட பணி செய்ய நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் 12–2019ல் தொழில் நுட்ப அனுமதி வரப்பெற்று ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் கடலூர் அவர்களுக்கு ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் செய்ய கடிதம் கொடுக்கப்பட்டு தினசரி நாளிதழ் தின செய்தியில் 9.12.2019 அன்று விளம்பரம் கொடுக்கப்பட்டது அதற்கு தின செய்தி பட்டில் தொகை ரூ. 10,500/– 29.12.2019 வரப்பெற்றது. இத்தொகையை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1. மன்றம் அனுமதிக்கலாம்
2.மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்

16. பண்ணுருட்டி நகராட்சியில் 1முதல் 33 வார்டுகளுக்கும் புதிய குடிநீர் இணைப்பு வழங்க நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.127 (WS–2) நாள் 05.12.2017 ல் செண்டேஜ் ஜார்ஜ் (ம) குடிநீர் அபிவிருத்திக் கட்டணத்தை ஆண்டுக்கு ஒரு முறை 12% சதவீதம் உயர்த்தி, கொள்ள அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளதினற்கிணங்க, புதிய குடிநீர் இணைப்பு வழங்கவும், மேலும் மேற்பார்வைக் கட்டணம், 2020-2021 ம் ஆண்டிற்கு உயர்த்திக் கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | நகராட்சிக்கு செலுத்தும் கட்டணம் மீட்டருக்கு | கருங்கல் ஜல்லி (ம) மண்சாலை ரூ. | தார்சாலை ரூ. | சிமெண்ட் சாலை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | 0-30 மீட்டர் நீளத்திற்கு | 2222.00 | 4670.00 | 5398.00 |
| 2 | 30-90மீட்டர் நீளத்திற்கு | 3427.00 | 5923.00 | 6640.00 |

1. செண்டேஜ் கட்டணம் 705.00
2. மேற்பார்வைக் கட்டணம் 940.00

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.
(கோப்பு எண் 1181/2012/இ2 )

இடம் – பண்ணுருட்டி நகராட்சி
நாள் – 31–01–2020

ஆணையாளர் (ம) தனி அலுவலர்,
பண்ணுருட்டி நகராட்சி.